


பஞ்செட்டியில் உள்ள வேலம்மாள் தொழில் நுட்ப கல்லூரி கணினி பொறியியல் துறை சார்பில் நடந்த தொழில் நுட்ப திட்ட கருத்தரங்கில் முதன்மை கட்டிட ஆராய்சியாளர் அல்பிரேட் தேவநேசன் சாமுவேல் மாணவிக்கு சான்றிதழ் மற்றும் கோப்பை வழங்கினார். அருகில் துணை முதல்வர் சௌந்தராஜன்.

# வேலம்மாள் கல்லூரியில் தேசிய கருத்தரங்கம்

பொன்னேரி, மார்ச் 22: பொன்னேரி அடுத்த வேலம்மான் தொழில் நுட்பக் கல்லூரியில் கணினி பொறியியல் துறையில் தேசிய அளவிலான தொழில் நுட்ப கருத்தரங்கு 'சாணக்யா ஏகே 15' நேற்று நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு கல்லூரி முதல்வர் சந்திரசேகர் தலைமை தாங்கினார். கணிப்பொறி அறிவியல் துறை தலைவர் மரியமைக் கேல்விசுவாசம் அனைவரையும் வரவேற்றார்.

கல்லூரி ஆலோசகர் ரசாக், துணை முதல்வர் சவுந்திரராசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். சிறப்பு அழைப்பாளராக முதன்மை கட்டிட ஆராய்ச்சியாளர் அல்பிரேட்தேவநேசன்சாமுவேல் கலந்து கொண்டு கணிப்பொறி அறிவியல் துறையில் புதிய கண்டுபிடிப்புகளையும் அகன் முக்கியத்துவத்தை பற்றியும் மாணவர்களுக்கு விளக்கினார். இக்கருத்தரங்கில் தமிழகம் மற்றும் பல்வேறு மாநிலங்களில் இருந்து பொறியியல் கல்லூரிகளை சேர்ந்த 300க்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர்கள், தங்களது கணினி பொறியியல் துறை சார்பில் சம்பந்தப்பட்ட படைப்புகளை சமர்ப்பித்தனர்.

கட்டிட ஆராய்ச்சி நிறுவனங்களை சேர்ந்த தொழில் நுட்ப வல்லுநர்கள் பகுப்பாய்வு செய்து சிறந்த படைப்புகள் அளித்த மாணவ, மாணவிகளுக்கு பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. இதில் வேலம்மாள் தொழில் நுட்பக்கல்லூரி துணை பேராசிரியர் பிரவீன் குமார் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.